
# இமைப்பொழுதிலே



**அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக் 23:39-43).**

ஆண்டவருடைய இரத்தம் சிந்தப்பட்ட நேரத்தில் அதின் முதற்பலனாய், ஆண்டவராலேயே நேரடியாக இரட்சிப்பை பெற்று, அன்றே பரலோக வாழ்வை பெற்றவன் இந்த சிலுவையில் அறைப்பட்ட கள்ளன். சிலுவையில் அறையப்படுவதற்கு கொஞ்சம் முன்பு கூட அவன் தான் இவ்வாறு இரட்சிக்கப்படுவேன் என்பதை நினைத்திருக்க மாட்டான். ஆனால் அந்த கொடூர சிலுவை பாடுகள் மத்தியிலும் தான் எல்லாம் முடிந்தது என்று கூறுவதற்கு சற்று முன்னரும், அவருடைய இரத்தத்தினால் மீட்கப்படும் மீட்பை அவரே சிலுவையில் ஆரம்பித்து வைத்தார். மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்ற ஆண்டவருடைய வாக்குப்படி, சிலுவையில் காரிருள் சூழுலும் நேரத்திலும், பரலோகத்தில் ஒரு

மகிழ்வு உண்டாகும்படியாய், சத்துருவாகிய சாத்தானின் அழிவை ஆரம்பித்து வைக்கும்படியாய் நியாயபிரமாணத்தை முடித்து, கிருபையினால், அவருடைய இரத்தத்தினால் அனைவருக்கும் மீட்பு என்பதை ஆண்டவர் ஆரம்பித்து வைத்தார்.

ஆண்டவர் கூறியபடி, அந்தகாரத்தின் அதிகாரம் **(லூக் 22:53)** அங்கு செயலப்பட்டு கொண்டிருந்தாலும், பிசாசின் தலை நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறது என்பதை ஆண்டவர் அங்கு வெளிப்படுத்தினார். தான் செய்த தவறான செயல்களினால், தான் தண்டிக்க பட போகும் அந்த கடைசி வேளை வரை அவன் சிந்தித்து கொண்டிருந்ததெல்லாம், ஐயோ என் சரீரம் கொடிய சிலுவை வேதனை அடைய போகிறதே, அதற்கு மேலாக, தேவனுக்கு பயப்படாமல் தான் செய்த தீய செயல்களினால், தன் ஆவியும், ஆத்துமாவும் நரகத்தில் வேதனைப்பட போகிறதே என்ற துயரத்தில் இருந்த அவனுக்கு, ஆண்டவர் இப்படிப்பட்ட ஒரு தருணத்தை தந்தார். அதை அவன் சரியாக பயன்படுத்தி கொண்டான்.

அப். பவுலின் வாழ்க்கையும் இப்படிப்பட்ட ஒன்றே. சவுலாய் இருந்து, சபையை துன்பப்படுத்தி பாழாக்கிக்கொண்டிருந்த **(அப் 8:3)** நேரத்தில் ஒரு நொடிபொழுதில், "**அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.**" **(அப் 9:4-6)**. இந்த சத்தத்திற்கு, பரம தரிசனத்திற்கு கீழ்படிந்து, முற்றிலும் மாற்றம் அடைந்தவராய் சபைக்காக, புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்காக தன்னையே அர்பணித்து, சபைக்காக கர்ப வேதனை படுகிற தாய்யாய், தகப்பனாய் மாறிப்போனார். இவை இரண்டிலும் ஆண்டவர் நேரடியாய் இவர்களோடு இடைப்பட்டு, அவர்கள் வாழ்க்கையை இமைப்பொழுதிலே தலைகீழாக மாற்றிப்போட்டார். இதுவே அவரின் அன்பு, இதுவே அவரின் வல்லமை.

இப்படி 2000 ஆண்டுகளாக ஆண்டவருடைய இந்த வல்லமையினால் தொடப்பட்டு, வாழ்க்கை தலைகீழாக மாற்றப்பட்டோர் ஏராளம். சிறைச்சாலையில் மரண தண்டனை கைதியாக இருந்து தன் பாவத்திற்காக, இவ்வுலக நிதீ, சரீர மரணத்தை தங்களுக்கு தந்த பொழுதும், ஆண்டவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு, மீட்கப்பட்டு, வாழ்வில் மாற்றம்பெற்று, மரண தண்டனையை சமாதானத்தோடு ஏற்று பரலோகத்தை சென்றடைந்தவர் பலர். இன்னும் தங்கள் பொல்லாத வழியில் / வாழ்க்கையில் இருந்து மனந்திரும்பி, முழுவதுமாய் ஆண்டவருக்கு தங்களை அர்பணித்து வாழ்ந்தோர், வல்லமையாய் ஊழியம் செய்தோர் பலர். பழைய மனுஷனை கலைந்து போட்டு, கிறிஸ்துவுகுள்ளாக புதிய மனுஷனை தரித்து கொள்ளும் அனுபவமே கிறிஸ்துவுகுள்ளான வாழ்வின் அஸ்திபாரம் ஆகும்.

ஆண்டவர் சஷணபொழுதில் மாற்றங்களை பலர் வாழ்வில் செய்து கொண்டிருக்கிறார். சிலருடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் அனுபவம் பவுலை போல உடனே நிகழாமல் சிறிது சிறிதாய் காலம் எடுத்து நடந்தாலும், அவர்கள் மனமாற்றத்திற்கான ஒரு ஆரம்பத்தை ஆண்டவர் ஏதோ ஒரு நாளில் அவர்களுடன் இடைப்பட்டு துவக்கி வைக்கிறார். அந்த நொடி பொழுதே நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் முக்கியமானதாகும். பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும், ஆண்டவர் ஏதோ ஒரு விதத்தில் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை தருகிறார். சிலர் அதை பயன்படுத்தி கொள்கின்றனர், மற்ற சிலர் அதை தவற விடுகின்றனர். இப்படிப்பட்ட இரட்சிப்பை பெற்ற, அழைப்பை பெற்ற நாம் **"பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது." (1 தெச 4:3), "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்." (1 தெச 4:7).** மேலும் **மத் 5:8** கூறுகிறது "**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.**" என்று.

இப்படியாக ஏதோ ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, தேவனுடைய அநாதி திட்டத்தின்படி இரட்சிப்பின் பாதைக்கு திருப்பப்பட்ட நாம், பரிசுத்தமாக்க பட்டவர்களாய், "**இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.**" **(1 கொரி 15:51-54).** இதுவே இந்த கிருபையின் காலத்தில் தேவனுடைய அநாதி திட்டமாகும். எனவே இந்த கிருபையின் நாட்கள் முடிவதற்குள், இரட்சிப்பின் சுவிசேஷத்தை எத்தனை மக்களுக்கு கூற முடியுமோ, அத்தனை மக்களுக்கு கூறி, நாமும் பரிசுத்தத்தில் பூரணப்பட நம் வாழ்வையும் அர்பணிப்போடு ஜாக்கிரதையாய் காத்துகொள்வோமாக. இரட்சிப்பு எப்படி நம் வாழ்வில் ஒரு நாள் நிகழ்ந்ததோ, அதே போல் நம் சரீர மறுரூபமும் ஒரு நாள் இமைப்பொழுதிலே நடக்கும் என்ற நம்பிக்கையோடே, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி பிரயாசப்படுவோமாக **(எபே 4:11).** ஆமென், அல்லேலூயா.